1973 டிசம்பர் 4]

Rural Engineering Survey.

*614 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works with reference to question No. 80 answered on 11th August 1973 be pleased to state—

(a) the details of works so far carried out under the Centrally Sponsored Scheme of Rural Engineering Survey in Ramanathapuram and Madurai districts ; and

(b) the results achieved thereby ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இதற்காக மத்திய அரசிலிருந்து ஏதாவது உதவி கிடைக்குமா? அப்படியானல் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி வேண்டும். *

டெலிவிஷன் செட்டுகள் உற்பத்தி

*615 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் 7—12—1972-ல், 72 ஆம் எண் வினவிற்கு அளித்த விடையையொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கூட்டுத்துறையில் டெலிவிஷன் செட்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: "டெலிவிஷன் செட்டுகள்" உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அடையாறிலுள்ள இன்ஸ்ட்ரானிக் காம்பஸ் என்னுமிடத்தில் டைனவிசன் என்ற நிறுவனத்தால் கூட்டுத்துறையில் நிறுவப்படும். மேற்படி நிறுவனம் விரைவில் செயல்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது. 1974-ம் ஆண்டு மத்தியில் உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

@ 833-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

* 639-ம் பக்கத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களால் இத் துணை வினவிற்கு விடை அளிக்கப்பட்டுள்ளதைக் காண்கவும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நிறுவனம் எவ்வளவு மூலதனத்தில் தொடங்க இருக்கிறது? ஒரு ஆண்டுக்கு எவ்வளவு டெலிவிஷன் செட்டுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுமார் இருபது லட்சம் ரூபாய். சுமார் 10,000 டெலிவிஷன் செட்டுகள்.

Plantations in Tamil Nadu.

* 616 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of plantations and the extent of land therein under foreign control and foreign collaboration ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 23 தேயிலைத் தோட்டங்கள், 2 காப்பித் தோட்டங்கள், 3 ஏலத் தோட்டங்கள், 1 இரப்பர் தோட்டம். இவைகளின் மொத்தப் பரப்பு 9,518.28 ஹெக்டேர்கள்.

மாயூரத்திலுள்ள சிறுதொழில் பிரிவு

* 617 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள தொழிற்சாலையில் தற்போது எந்தெந்தக் கருவிகள் செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (1) கிடங்குகள், சர்க்கரை ஆலைகள், பள்ளிக்கட்டிடங்கள் முதலியவைகளுக்கான உருக்குக் கட்டுமானங்கள்.

(2) உருக்கு மற்றும் மரத்தாலான நீர்ப்பாசன மதகுக் கதவுகள்—திருகு மற்றும் நீள்தண்டு வகை.

(3) உருக்காலான மேல்நிலை நீர்த்தொட்டிகள்.

(4) உருக்கு புகைப் போக்கிகள், கம்பி வேலைப்பாடுகள் மற்றும் நுழைவாயில்கள்.

(5) மேற்கண்டவைகளுக்குச் செப்பனிடும் பணிகளையும் பழுதுபார்க்கும் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளல்.